

# Southern Builder

Bulletin of Builders' Association of India - Southern Centre

For Private Circulation only

Estd1941

MARCH 2026




***08.03.2026 அன்று சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற பவள விழா நிறைவு நிகழ்ச்சியில் L&T நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. S.N. சுப்பிரமணியன் அவர்கள் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார்.***

jayaraj
*Leaders in Teak*



**T. RAJA SEKHAR**
MANAGING DIRECTOR

# JAYARAJ-TIMBER

Teak Wood Logs | Teak Sizes | Teak Planks
Teak Frames | Doors & Windows



Our company has 30+ years of expertise in Teakwood, importing from around **10 countries** across the World. We operate from **Chennai offering excellent quality**, **pest-free Teakwood** at **competitive prices** to our customers. We supply **PAN India** to **Builders, Furniture Manufacturers, Saw millers, Traders, etc.**

PHONE
**9840070992 | 9791067555 | 7092212666**

ADDRESS
19, Puzhal Union Road, Vadaperumbakkam,
Chennai-600060

WEBSITE
www.jayarajtimber.com

EMAIL
enquiry@jayarajtimber.com












# Southern Builder

Bulletin of Builders' Association of India - Southern Centre

**For Private Circulation only**

Estd1941

Offical Journal of Builders' Association of India - Southern Centre. March 2026



**Builders' Association of India**
**Southern Centre**
Plot No. A1, 1st Main Road, Opp. to AIEMA, Industrial Estate, Ambattur, Chennai - 600 058.
(T) 044-2625 2006 | (E) baisouthern1950@gmail.com | (W) www.baisouthern.com



## OFFICE BEARERS - 2025-2026

MR. R NIMRODE - CHAIRMAN
MR. K GOPINATHAN - VICE CHAIRMAN
MR. G DIWAKAR - HON. SECRETARY
MR. A SATHYANARAYANA - HON. TREASURER
MR. J NIMAL CHAND - HON. JOINT SECRETARY
MR. N G LOKANATHAN - IMM. PAST CHAIRMAN

## EDITOR

MR. S AYYANATHAN
98410 46799

## EDITORIAL BOARD

MR. S D KANNAN
MR. S RAMAPRABHU
MR. P K P NARAYANAMURTHY

## ADVISORS

Bhisma R RADHAKRISHNAN
All India Past President & Trustee

MR. Mu MOAHAN
All India Past President & Trustee


## CONTENTS


ஆசிரியர் மடல் 04

மய்யத்தலைவர் மடல் 05

Tax Corner 06

நத்தம் மனை, புறம்போக்கு நிலம்! இரண்டுக்குமான வித்தியாசம் என்ன? 09

தமிழகத்து பொறியியலின் தங்க சுரங்கம் வீட்டில் தண்ணீர் சிக்கன குறிப்புகள்.... 11

நினைவில் நின்றவை 13

Real Estate Update 21

Photo Page 22

Southern Centre Activities 46



## TARIFF

| Si. No. | Description | Rate Per Issue | Rate Per Annum |
|---|---|---|---|
| 1. | Multi Colour A4 Size Back Cover | Rs.40,000/- | Rs.4,00,000/- |
| 2. | Multi Colour A4 Size Rear Cover Inner | Rs.30,000/- | Rs.3,00,000/- |
| 3. | Multi Colour A4 Size Front Cover Inner | Rs.30,000/- | Rs.3,00,000/- |
| 4. | Multi Colour A4 Size Inner Page | Rs.15,000/- | Rs.1,50,000/- |
| 5. | Multi Colour A4 Size Half Size Inner Page | Rs.10,000/- | Rs.1,00,000/- |
| 6. | Black & White A4 Inner Page | Rs.10,000/- | Rs.1,00,000/- |
| 7. | Black & White A4 Half Page Inner Page | Rs.6,000/- | Rs.60,000/- |

Extra 5% GST

Disclaimer

The Materials Provided in this Publication are a free Service to its readers. No copyright Violations are intended. Views expressed in this publication are not necessarily of BAI. No direct or indirect or consequential liabilities are acceptable on the information made available herein.

# ஆசிரியர் மடல்



**அன்புடையீர் வணக்கம்,**

அகில இந்திய கட்டுநர் சங்கத்தின் தேர்தல் நடைமுறைகள் யாவும் நிறைவடைந்து நிர்வாகிகள் பொறுப்பேற்க உள்ளார்கள். அகில இந்தியத் தலைவராக திரு. தர்மேஷ் அவஸ்தி அவர்களும், தென் மண்டல துணைத்தலைவராக திரு. R. பிரகாஷ் அவர்களும், தமிழ்நாடு மாநிலத்தலைவராக திரு. N. ராமலிங்கம் அவர்களும், மாநிலச் செயலாளர் திரு. A.N. பாலாஜி அவர்களும், தென்னக மய்யத்தலைவராக திரு. K. கோபிநாதன் அவர்களும், செயலாளராக திரு. A. சத்தியநாராயணா அவர்களும் மற்றும் நிர்வாகிகள் தேர்வாகி உள்ளார்கள். அனைவருக்கும் இதயமார்ந்த நல்வாழ்த்துக்கள்.

தென்னக மய்யம் 75வது ஆண்டு பவள விழா (Platinum Jubilee) நிறைவு விழாவினை மிகச் சிறப்பாக நடத்தி பெருமை சேர்த்தது. இதற்கு முக்கிய காரண கர்த்தாவாக செயலாற்றிய ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் திரு. R. சிவக்குமார் மற்றும் திரு. Mu. மோகன், திரு. L. வெங்கடேசன், மய்யத்தலைவர் திரு. R. நிம்ரோட் மற்றும் மய்ய நிர்வாகிகள் அனைவருக்கும் பாராட்டுக்கள்.

அனைத்திற்கும் மகுடம் வைத்தது போல் விழாக்குழுத் தலைவர் பீஷ்மா திரு. R. இராதாகிருஷ்ணன் அவர்களின் அளவில்லா பெருமுயற்சி, உழைப்பு குறிப்பிடத்தக்க வகையில் அமைந்ததை அனைவரும் கண்கூடாக கண்டனர். தலைமை விருந்தினரை அழைத்து வந்தது, அகில இந்திய முன்னாள் தலைவர்கள் கலந்து கொள்ள எடுத்த முயற்சி அனைத்தும் சேர்ந்து நிறைவு விழா வெற்றிகரமாக அமைந்ததற்கு பீஷ்மா அவர்களை பாராட்டிட வார்த்தைகள் கிடைக்கவில்லை. பீஷ்மா அவர்கள் சேவை தொடர்ந்திட வேண்டி வணங்குவோமாக, தென்னக மய்யத்தின் புகழ் மேலும் உயர்ந்து ஓங்கிட வாழ்த்துக்கள்.

சதர்ன் பில்டர் இந்த ஆண்டு நிறைவு இதழ் மூலம் சதர்ன் பில்டர் இதழ் சிறந்த முறையில் வெளிவர உதவி உற்ற துணையாக இருந்திட்ட அனைவருக்கும் இருகரம் கூப்பி நெஞ்சார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொண்டு எனது பணியினை நிறைவு செய்கிறேன்.

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தம்தம்
கருமமே கட்டளைக் கல்

- திருக்குறள்

நன்றி, வணக்கம்
என்றும் அன்புடன்
S. அய்யநாதன்

# மய்யத்தலைவர் மடல்



**தென்னக மய்ய உறுப்பினர்களுக்கு வணக்கம் !**

1950 ஆம் ஆண்டு துவங்கி இன்று வரையிலும் 75 ஆண்டுகளாக அகில இந்திய அளவில் ஒரு முன்னோடி மய்யமாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் நமது மய்யத்தின் பவள விழா நிறைவு கொண்டாட்டங்கள் மார்ச் 8ம் நாள் சென்னை வர்த்த மய்யத்தில் சிறப்பாக நடைபெற்றது. கட்டுமானத்துறையில் உலக அளவில் குறிப்பிடத்தக்க நிறுவனமான பல்வேறு கட்டுமானங்களுக்கு எடுத்துக்காட்டாக திகழும் L& T நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. S.N. சுப்பிரமணியன் அவர்கள் தலைமை விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தார். விழாவில் அகில இந்திய கட்டுநர் சங்கத்தின் முன்னோடிகளான முன்னாள் தலைவர்கள் கவுரவிக்கப்பட்டனர். விழா மிகச் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக பவளவிழாவின் தலைவராக சிறப்பாக பணியாற்றி அனைவரும் போற்றும் வகையில் நடத்திக்கொடுத்த சேவாரத்னா பீஷ்மா திரு. R. இராதாகிருஷ்ணன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2025-26 பவள விழா ஆண்டில் நமது மய்யத்தின் 50வது தலைவராக 1.4.2025 அன்று பொறுப்பேற்றுக் கொண்டு இந்நாள் வரையிலும் மய்ய நிர்வாகிகள் மற்றும் குழுக்களுடன் இணைந்து

- கட்டுமான தொழிலாளர்களுக்கு பல்வேறு இலவச மரத்துவ முகாம்களை நடத்தியுள்ளோம்.
- பல்வேறு உயர் அதிகாரிகளை சந்தித்து கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த, ஒப்பந்ததாரர்கள் நிலுவைத் தொகையை பெற முயற்சிகள் எடுத்துள்ளோம்.
- CMDA/RERA வில் பல்வேறு கோரிக்கைகள் சமர்ப்பித்து அவற்றுள் பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டன.
- நமது உறுப்பினர்கள் பயன்பெறத்தக்க வகையில் பல்வேறு தொழில்நுட்ப கலந்தாய்வு கூட்டங்கள் நடத்தியுள்ளோம்.
- உறுப்பினர்கள் மற்றும் தொழிலாளர்களை மகிழ்விக்கும் விதமாக கட்டுநர் தின விழா சிறப்பாக கொண்டாடினோம்.
- அரசு ITI ல் பயிலும் மாணவ மாணவிகளுக்கு இலவசமாக Draughtsman Civil CADD மற்றும் Architectural Draughtsman REVIT-3D போன்ற தளங்களில் Inplant Training வழங்கப்பட்டு வருகிறது.
- சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதமாக 2000 மரக்கன்றுகள் நடப்பட்டு அவை சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகின்றன.

இது போன்ற பல்வேறு நிகழ்வுகளை மிகச் சிறப்பாக நடத்த வழிகாட்டிய நமது மய்யத்தின் மூத்த

முன்னோடியும், ஏன் அகில இந்திய கட்டுநர் சங்கத்திற்கே முன்னோடியுமான பெருமைக்குரிய நமது பீஷ்மா அவர்களுக்கும், BAI தளபதி முன்னாள் அகில இந்தியத்தலைவர் மற்றும் காப்பாளர் திரு. Mu. மோகன் அவர்களுக்கும், ஏனைய முன்னோடிகளுக்கும், எனக்கு தோளோடு தோள் நின்று பணியாற்றிய நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு மற்றும் குழுத்தலைவர்கள், குழுத்துணைத்தலைவர்கள் மற்றும் நமது மய்யத்தின் பெருமைக்குரிய உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரும் ஏப்ரல் 1, 2026 முதல் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மய்யத்தலைவர் திரு. K. கோபிநாதன் அவர்களின் தலைமையில் தென்னக மய்யம் மேலும் சிறப்பாக செயலாற்ற எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

என்றும் அன்புடன்,

**R. நிம்ரோட்**

**மய்யத்தலைவர்**

# Tax Corner



திரு. S.D. கண்ணன்
Taxation Committee

## TDS MASTER TABLE FOR TAX YEAR 2026-27 - INCOME TAX ACT 2025

| New Section | Old Sec | Code | Category/Heading | Nature of Payment/Transaction | Rate | Threshold | New Form | Old Form |
|---|---|---|---|---|---|---|---|---|
| 392 | 192 | 1001 | TDS on Salary | Government employee (other than union) | Avg Rate | As per slab | Form 138 | Form 24Q |
| 392 | 192 | 1002 | TDS on Salary | Private employee | Avg Rate | As per slab | Form 138 | Form 24Q |
| 392 | 192 | 1003 | TDS on Salary | Indian government employee | Avg Rate | As per slab | Form 138 | Form 24Q |
| 392 | 192A | 1004 | TDS on PF Withdrawal | PF Withdrawal Payment | 10% | ₹ 50,000 | Form 140 | Form 26Q |
| 393(1) Table: S1.No 1.(i) | 194D | 1005 | Commission | Insurance Commission | 2% | 20000 | Form 140 | Form 26Q |
| 393(1) Table: S1.No 1.(ii) | 194H | 1006 | Commission | Other than insurance | 2% | ₹ 20,000 | Form 140 | Form 26Q |
| 393(1) Table: S1.No 2.(i) | 194-IB | 1007 | Rent by Individual/HUF | Rent by Individual/HUF | 2% | ₹ 50,000 pm | Form 141 | Form |
| 393(1) Table: S1.No 2.(ii).D(a) | 194-IB | 1008 | Rent by Specified Person | Plant & Machinery | 2% | ₹ 50,000 pm | Form 140 | Form 26Q |
| 393(1) Table: S1.No 2.(ii).D(b) | 194-I | 1009 | Rent by Specified Person | Building | 10% | ₹ 50,000 pm | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1. No 3.(i) | 194-I | 1010 | Immovable Property | Transfer of Immovable Property (Other | 1% | ₹ 50 Lakh | Form 141 | Form |
| 393(1) Table S1.No 3.(ii) | 194-IA | 1011 | Immovable Property | Joint Development Agreement | 10% | - | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1.No 3.(iii) | 194-IC | 1012 | Immovable Property | Compensation or enhanced | 10% | ₹ 5 Lakh | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1.No 4.(i) | 194K | 1013 | Specified Mutual Fund | Specified Mutual Fund | 10% | ₹ 10,000 | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1.No 4.(ii) | 194LBA | 1014 | Business Trust | Interest | 10% | - | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1.No 4.(ii) | 194LBA | 1015 | Business Trust | Dividend | 10% | - | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1.No 4.(ii) | 194LBA | 1016 | Business Trust | Rent | 10% | - | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1.No 4.(iii) | 194LBA | 1017 | Capital Market Income | REIT | 10% | - | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1.No 4.(iv) | 194LBC | 1018 | Capital Market Income | Securitisation Trust | 10% | - | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1.No 5.(i) | 193 | 1019 | Interest Income | Interest on Securities | 10% | ₹ 10,000 | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1.No 5.(ii). D(a) | 194A | 1020 | Interest Income | Interest from Banks/Post Office/Co-op | 10% | ₹ 1,00,000 | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1.No 5.(ii). D(b) | 194A | 1021 | Interest Income | Interest from Banks/Post Office/Co-op | 10% | ₹ 50,000 | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1.No 5.(iii) | 194A | 1022 | Interest Income | Interest other than banks | 10% | ₹ 10,000 | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1.No. 6.(i).D(a) | 194C | 1023 | Contract, Professional & Technical | Contract - Individual/HUF | 1% | ₹ 30k (Single) / | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1.No. 6.(i).D(b) | 194C | 1024 | Contract, Professional & Technical | Contract - Other than Individual/HUF | 2% | ₹ 30k (Single) / | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1.No. 6.(ii) | 194M | 1025 | Contract, Professional & Technical | Any sum for | 2% | ₹ 50,00,000 | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1.No. 6.(ii).D(a) | 194J | 1026 | Contract, Professional & Technical | Technical Service/Royalty/Film | 2% | ₹ 50,000 | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1.No. 6.(ii).D(b) | 194J | 1027 | Contract, Professional & Technical | Professional Service (Other) | 10% | ₹ 50,000 | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1.No. 6.(ii).D(b) | 194J | 1028 | Contract, Professional & Technical | Director Remuneration | 10% | - | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1.No. 7 | 194 | 1029 | Dividend | Dividend from Domestic Company | 10% | - | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1.No. 8.(i) | 194DA | 1030 | Others | LIC payment | 2% | 100000 | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1.No. 8.(ii) | 194Q | 1031 | Others | Purchase of Goods | 0.10% | 5000000 for individual, otherwise 0 | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1.No. 8.(iii) | 194P | 1032 | Others | Specified Senior citizen | Slab rate | Slab rate | Form 138 | Form 24Q |
| 393(1) Table S1.No. 8.(iv) | 194R | 1033 | Others | Perquisite & benefit (Cash) | 10% | 20000 | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1.No. 8.(iv) Note 6 | 194R | 1034 | Others | Perquisite & benefit (Kind) | 10% | 20000 | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1.No. 8.(v) | 194O | 1035 | Others | TDS by ECO | 0.10% | 500000 for individual & HUF | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1.No. 8.(vi) | 194S | 1036 | Others | VDA - individual or HUF (Cash or Kind) | 1% | - | ~~Form 141~~ | Form 26EQ |
| 393(1) Table S1.No. 8.(vi) | 194S | 1037 | Others | VDA- Other than individual (Cash) | 1% | - | Form 140 | Form 26Q |
| 393(1) Table S1.No. 8.(vi) Note 6 | 194S | 1038 | Others | VDA- Other than individual (Kind) | 1% | - | Form 140 | Form 26Q |
| 393(2) Table S1.No. 1 | 194E | 1039 | Others - NRI Payments | Payment to Sportsperson/Sports | 20% | - | Form 144 | Form 27Q |

Continue...

## TDS MASTER TABLE FOR TAX YEAR 2026-27 - INCOME TAX ACT 2025

| New Section | Old Sec | Code | Category/Heading | Nature of Payment/Transaction | Rate | Threshold | New Form | Old Form |
|---|---|---|---|---|---|---|---|---|
| 393(2) Table S1.No. 2 | 194LC | 1040 | Others - NRI Payments | Interest on money borrowed in foreign | 5% | - | Form 144 | Form 27Q |
| 393(2) Table S1.No. 3 | 194LC | 1041 | Others - NRI Payments | Interest on Rupee Bond | 5% | - | Form 144 | Form 27Q |
| 393(2) Table S1.No. 4.E(a) | 194LB | 1042 | Others - NRI Payments | Interest on Rupee Bond (IFSC listed | 4% | - | Form 144 | Form 27Q |
| 393(2) Table S1.No. 4.E(b) | 194LBA | 1043 | Others - NRI Payments | Interest on Rupee Bond (IFSC listed | 9% | - | Form 144 | Form 27Q |
| 393(2) Table S1.No. 5 | 194LBA | 1044 | Others - NRI Payments | Interest by Infra Debt Fund (NRI) | 5% | - | Form 144 | Form 27Q |
| 393(2) Table S1.No. 6.E(a) | 194LBB | 1045 | Others - NRI Payments | Distributed income (Sec 223 Schedule V | 5% | - | Form 144 | Form 27Q |
| 393(2) Table S1.No. 6.E(a) | 196C | 1046 | Others - NRI Payments | Distributed income (Sec 223 Schedule V | 10% | - | Form 144 | Form 27Q |
| 393(2) Table S1.No. 7 | 196D | 1047 | Others - NRI Payments | Distributed income (Sec 223 Schedule V | 12.50% | - | Form 144 | Form 27Q |
| 393(2) Table S1.No. 8 | 194E | 1048 | Others - NRI Payments | Investment Fund (Sec 224) - other than | 10% | - | Form 144 | Form 27Q |
| 393(2) Table S1.No. 9 | 195 | 1049 | Others - NRI Payments | Securitisation Trust (Sec 221) | 12.50% | - | Form 144 | Form 27Q |
| 393(2) Table S1.No. 10 | 195 | 1050 | Others - NRI Payments | Units of MF (Schedule VII Table Sl. No. 20 | 20% | - | Form 144 | Form 27Q |
| 393(2) Table S1.No. 11 | 195 | 1051 | Others - NRI Payments | Units referred to in Sec 208 | 10% | - | Form 144 | Form 27Q |
| 393(2) Table S1.No. 12 | 195 | 1052 | Others - NRI Payments | Long-term capital gains - Transfer of units | 10% | - | Form 144 | Form 27Q |
| 393(2) Table S1.No. 13 | 196A | 1053 | Others - NRI Payments | Interest/Dividends - Bonds/GDR (Sec 209) | Rate in force | - | Form 144 | Form 27Q |
| 393(2) Table S1.No. 14 | 196B | 1054 | Others - NRI Payments | Long-term capital gains - Bonds/GDR (Sec | 12.50% | - | Form 144 | Form 27Q |
| 393(2) Table S1.No. 15 | 196C | 1055 | Others - NRI Payments | Securities (Sec 210(1) Table Sl. No. 1) | 20% | - | Form 144 | Form 27Q |
| 393(2) Table S1.No. 16 | 196D | 1056 | Others - NRI Payments | Securities (Sec 210(1) Table Sl. No. 1) | 10% | - | Form 144 | Form 27Q |
| 393(2) Table S1.No. 17 | 195 | 1057 | Others - NRI Payments | Interest (not under Serial 2-5) or other | Rate in force | - | Form 144 | Form 27Q |
| 393(3) Table S1.No. 1 | 194B | 1058 | Payment to any person | Lottery, Puzzle, Card Game, Gambling | 30% | ₹ 10,000 | Form 140 | Form 26Q |
| 393(3) Table S1.No. 1 (Note 2) | 194B | 1059 | Payment to any person | Lottery, Puzzle, Card Game, Gambling | 30% | ₹ 10,000 | Form 140 | Form 26Q |
| 393(3) Table S1.No. 2 | 194BA | 1060 | Payment to any person | Online Gaming - Net Winnings (Cash) | 30% | - | Form 140 | Form 26Q |
| 393(3) Table S1.No. 2 (Note 2) | 194BA | 1061 | Payment to any person | Online Gaming - Net Winnings (Kind) | 30% | - | Form 140 | Form 26Q |
| 393(3) Table S1.No. 3 | 194BB | 1062 | Payment to any person | Horse Race Winnings | 30% | ₹ 10,000 | Form 140 | Form 26Q |
| 393(3) Table S1.No. 4 | 194G | 1063 | Payment to any person | Commission on Lottery Sale | 2% | ₹ 20,000 | Form 140 | Form 26Q |
| 393(3) Table SN 5.D(a) | 194N | 1064 | Payment to any person | TDS on Cash Withdrawal (Co-operative Society) | 2% | 3 Crore | R - Form | Form 26Q |
| | | | | | | | NRI - Form | Form 27Q |
| 393(3) Table SN 5.D(b) | 194N | 1065 | Payment to any person | TDS on Cash Withdrawal (other than co-operative Society) | 2% | 1 Crore | R - Form | Form 26Q |
| | | | | | | | NRI - Form | Form 27Q |
| 393(3) Table S1.No. 6 | 194EE | 1066 | Payment to any person | NSS Withdrawal | 10% | ₹ 2,500 | R - Form | Form 26Q |
| | | | | | | | NRI - Form | Form 27Q |
| 393(3) Table S1.No. 7 | 194T | 1067 | Payment to any person | Payment to Partner | 10% | ₹ 20,000 | R - Form | Form 26Q |
| | | | | | | | NRI - Form | Form 27Q |
| 394 Table S1.No. 1 | 206C(1) | 1068 | TCS | Sale of Alcoholic Liquor for Human | 2% | - | Form 143 | Form 27EQ |
| 394 Table S1.No. 2 | 206C(1) | 1069 | TCS | Sale of Tendu Leaves | 2% | - | Form 143 | Form 27EQ |
| 394 Table S1.No. 3 | 206C(1) | 1070 | TCS | Timber obtained under forest lease | 2% | - | Form 143 | Form 27EQ |
| 394 Table S1.No. 3 | 206C(1) | 1071 | TCS | Timber obtained other than forest lease | 2% | - | Form 143 | Form 27EQ |
| 394 Table S1.No. 3 | 206C(1) | 1072 | TCS | Other Forest Product | 2% | - | Form 143 | Form 27EQ |
| 394 Table S1.No. 4 | 206C(1) | 1073 | TCS | Sale of Scrap | 2% | - | Form 143 | Form 27EQ |
| 394 Table S1.No. 5 | 206C(1) | 1074 | TCS | Sale of Minerals (Coal, Lignite, Iron Ore) | 2% | - | Form 143 | Form 27EQ |
| 394 Table S1.No. 6 | 206C(1F | 1075 | TCS | Motor Vehicle (Value > ₹10 Lakh) | 1% | > ₹ 10 Lakh | Form 143 | Form 27EQ |
| 394 Table S1.No. 6 | 206C(1F | 1076 | TCS | Wristwatch (Value > ₹10 Lakh) | 1% | > ₹ 10 Lakh | Form 143 | Form 27EQ |

**Continue...**

## TDS MASTER TABLE FOR TAX YEAR 2026-27 - INCOME TAX ACT 2025

| New Section | Old Sec | Code | Category/Heading | Nature of Payment/Transaction | Rate | Threshold | New Form | Old Form |
|---|---|---|---|---|---|---|---|---|
| 394 Table S1.No. 6 | 206C(1F | 1077 | TCS | Art Piece (Value > ₹10 Lakh) | 1% | > ₹ 10 Lakh | Form 143 | Form 27EQ |
| 394 Table S1.No. 6 | 206C(1F | 1078 | TCS | Coin/Stamp (Value > ₹10 Lakh) | 1% | > ₹ 10 Lakh | Form 143 | Form 27EQ |
| 394 Table S1.No. 6 | 206C(1F | 1079 | TCS | Yacht/Boat/Helicopter (Value > ₹10 Lakh) | 1% | > ₹ 10 Lakh | Form 143 | Form 27EQ |
| 394 Table S1.No. 6 | 206C(1F | 1080 | TCS | Sunglasses (Value > ₹10 Lakh) | 1% | > ₹ 10 Lakh | Form 143 | Form 27EQ |
| 394 Table S1.No. 6 | 206C(1F | 1081 | TCS | Handbag/Purse (Value > ₹10 Lakh) | 1% | > ₹ 10 Lakh | Form 143 | Form 27EQ |
| 394 Table S1.No. 6 | 206C(1F | 1082 | TCS | Shoes (Value > ₹10 Lakh) | 1% | > ₹ 10 Lakh | Form 143 | Form 27EQ |
| 394 Table S1.No. 6 | 206C(1F | 1083 | TCS | Sportswear & Sport Equipment (Value > | 1% | > ₹ 10 Lakh | Form 143 | Form 27EQ |
| 394 Table S1.No. 6 | 206C(1F | 1084 | TCS | Home Theatre (Value > ₹10 Lakh) | 1% | > ₹ 10 Lakh | Form 143 | Form 27EQ |
| 394 Table S1.No. 6 | 206C(1F | 1085 | TCS | Horse (Value > ₹10 Lakh) | 1% | > ₹ 10 Lakh | Form 143 | Form 27EQ |
| 394 Table S1.No. 7 | 206C(1G | 1086 | TCS | Remittance under LRS - | 2% | > ₹ 10 Lakh | Form 143 | Form 27EQ |
| 394 Table S1.No. 7 | 206C(1G | 1087 | TCS | Remittance under LRS - Other Purposes | 20% | > ₹ 10 Lakh | Form 143 | Form 27EQ |

# நத்தம் மனை, புறம்போக்கு நிலம்! இரண்டுக்குமான வித்தியாசம் என்ன ?



**L. SAIKUMAAR,**
Advocate

நத்தம் மனை மற்றும் புறம்போக்கு நிலம் என்ற இரண்டுக்கும் உள்ள வேறுபாடு என்ன என்பதை தெரிந்து கொள்ளுங்கள். மேலும் பட்டா வழங்க முடியாத நிலங்கள் என்னென்ன என்பதையும் பார்க்கலாம்.

**"நத்தம் மனை" மற்றும் "புறம்போக்கு நிலம்" என்ற இரண்டிற்கும் சட்ட ரீதியான முக்கிய வேறுபாடு.**

1. நத்தம் மனை (Natham land / Grama Natham) இது கிராம மக்கள் குடியிருப்பு பயன்பாட்டிற்காக அரசால் ஒதுக்கப்பட்ட நிலமாகும். இதனை "கிராமநத்தம் நிலம்", "நத்தம் மனை" என்றும் சொல்வார்கள். பொதுவாக இவை பட்டா வழங்கப்படும் நிலங்கள் அதாவது, நீண்டகாலமாக வசித்து வந்தவர்களுக்கு பட்டா பெறும் உரிமை கிடைக்கும். Revenue recordல் "Grama Natham" என்று குறிப்பிடப்படும். இதனை வாங்கவும், விற்கவும், பத்திர பதிவு செய்யவும் வழி உண்டு (பட்டா இருப்பின்). இதற்கான சட்டம்: Tamil Nadu Land Encroachment Act, 1905, மற்றும் Village Natham Settlement Scheme ஆகியவை பொருந்தும்.
2. புறம்போக்கு நிலம் (Poramboke land) "புறம்போக்கு" என்றால் அரசு பொது பயன்பாட்டிற்கான நிலம் என்று பொருள். இதை தனிநபர் உரிமையாக எடுத்துக் கொள்ள முடியாது.

சாலை புறம்போக்கு (Road Poramboke) குளம் புறம்போக்கு (Tank / Pond Poramboke) ஓடை, புல்வெளி, அரசு வழி, Burial ground, etc. இதற்கு பட்டா வழங்கப்படாது, விற்பனை செய்யவும் முடியாது. ஆக்கிரமிப்பு செய்தால் அது அரசு நில ஆக்கிரமிப்பு (Encroachment) எனக் கருதப்படும்.

**முக்கிய வேறுபாடு சுருக்கமாக:**

**நத்தம் மனை**

1. உரிமை குடியிருப்பாளர்களுக்கு உரிமை கிடைக்கலாம்
2. பட்டா வழங்கப்படும் வாய்ப்பு உண்டு
3. விற்பனை / பதிவு சாத்தியம் (பட்டா இருந்தால்) Grama Natham rules

புறம்போக்கு நிலம்

1. அரசு மட்டுமே உரிமையாளர் பயன்பாடு குடியிருப்பு / வீடு அமைக்க பொதுப் பயன்பாடு (சாலை, குளம்)
2. பட்டா வழங்க முடியாது
3. விற்பனை / பதிவு முடியாது Land Encroachment Act

நத்தம் பட்டா பெறும் நடைமுறை: நீங்கள் நத்தம் நிலத்தில் வீட்டுடன் வசித்து வந்தால், கீழ்க்கண்ட வழியில் பட்டா பெறலாம்.

ஒருமுறை பட்டா கிடைத்த பிறகு, அதை வாங்கவும் / விற்கவும் / பதிவுசெய்யவும் முடியும். ஆனால் பட்டா இல்லாமல் நத்தம் நிலத்தை பதிவு செய்தால், அது பரிமாற்றம் செல்லாததாக கருதப்படலாம்.

பட்டா வழங்க முடியாத நிலங்கள்: குளம் புறம்போக்கு ஓடை புறம்போக்கு சாலை புறம்போக்கு சுடுகாடு, வளையாட்டு மைதானம், நீர்வடிகால் நிலம், இவற்றில் எந்தச் சூழ்நிலையிலும் தனிநபர் பட்டா பெற முடியாது. இவ்வாறு அந்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சொத்து பத்திரத்தில் பிழைகள் இருந்தால் அதை சரி செய்ய முடியுமா?**

அதற்கான சரியான விதி மற்றும் வழிமுறைகள்.

நம்முடைய சொத்து பத்திரத்தில் பிழைகள் இருந்தால் அதை சரி செய்ய முடியுமா? அதற்கான முறைகள் என்ன என்பது குறித்து இந்த பதிவில் விரிவாகப் பார்க்கலாம்.

நாம் பத்திரம் பதிவு செய்யும் நேரத்தில் எத்தனை முறை படித்து பார்த்தாலும் சில தவறுகள் கண்ணுக்கு தெரியாமலேயே போய்விடும். பத்திரம் பதிவு செய்த பின்னர் அதை பொறுமையாக வாசித்துப் பார்க்கும் பொழுது பிழைகள் நம் கண்ணுக்கு தெரியவரும். அப்படிப்பட்ட நேரத்தில் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து பலருக்கும் குழப்பம் இருக்கும். அதற்கான விரிவான விளக்கங்கள் குறித்து இந்த பதிவில் பார்க்கலாம்.

**சொத்து பத்திரத்தில் பிழைகள் இருந்தால் என்ன செய்வது?**

உங்களுடைய சொத்து சார்ந்த பத்திரத்தில் எழுத்து மற்றும் வார்த்தை பிழைகள் இருந்தால்

அதை சரி செய்ய ‘பிழை திருத்தல் பத்திரம்’ பயன்படுத்தப்படுகிறது. இதனை ‘சரிப்படுத்தும் ஆவணம்’ அல்லது ‘சீர் செய்யும் ஆவணம்’ என்று அழைக்கின்றனர். கிரயம், செட்டில்மெண்ட், பாகப்பிரிவினை, உயில், பவர் பத்திரம், அடமானம், விடுதலை, ஒப்பந்தம், அக்ரிமெண்ட் போன்ற அனைத்து ஆவணங்களுக்கும் இந்த ‘பிழை திருத்தல் பத்திரம்’ போட முடியும்.

**சாதாரண பிழை திருத்தல் பத்திரம்:**

பட்டாவையும், பத்திரத்தையும் பார்க்கும் பொழுது பட்டாவில் உள்ள பெயரும் பத்திரத்தில் உள்ள பெயரும் ஒன்றாக இல்லை என்றால் சொத்தை வாங்க பலர் தயங்குவர். இதற்காக சாதாரண பிழை திருத்தல் பத்திரம் போடப்படுகிறது. இன்னார் வீட்டிற்கு வடக்கே என எழுதுவதற்குப் பதிலாக இன்னார் வீட்டிற்கு கிழக்கே என தவறாக எழுதுவது, பட்டா எண்ணை பத்திரத்தில் தவறாக குறிப்பிடுவது, சர்வே எண்ணை தவறாக பதிவிடுவது, முன்புள்ள பத்திரங்களில் எண்களை தற்போது எழுதும் போது தவறாக எழுதுவது, இன்சியல், தந்தை பெயர் தவறாக எழுதுவது, கதவு எண், ஊர் பெயர், தன்னுடைய பெயர் ஆகியவற்றை தவறாக எழுதுவது, கிரயப் பத்திரத்தில் வரை படம் விடுபட்டு விடுவது, மின் இணைப்பு எண்ணை மாற்றி எழுதுவது, தெரு பெயர், திசைகள், எல்லைகள் போன்ற தவறுதல்களை சாதாரண பிழை திருத்தல் பத்திரம் மூலம் திருத்த முடியும்.

**உரிமை மாற்றம் பிழை திருத்தல்**

அதேசமயம் உரிமை மாற்றம் பிழை திருத்தலின் பொழுது இரண்டு ஏக்கர் ஒரு சென்ட் என்பதை ஒரு ஏக்கர் இரண்டு சென்ட் என்று மாற்றி எழுதி விடுவது போன்ற பிழையால் பட்டா மாறுவது தடையாகிவிடும். இதனை திருத்துவதற்கு ‘உரிமை மாறும் பிழைத்தெடுத்தல் பத்திரம்’ போட வேண்டும். இந்த பத்திரம் எழுதும் போது சரியான அளவினை குறிப்பிட்டு, அதற்கு உண்டான சந்தை மதிப்பை வைத்து கட்டணம் செலுத்தினால் தான் இந்த உரிமை மாறும் பிழை திருத்தல் பத்திரம் போட முடியும். குறைவான சதுர அடி நிலத்தை அதிக சதுர அடியாக எழுதிவிட்டு அதை திருத்தம் செய்யும்பொழுது சார் பதிவாளர் அலுவலகத்தில் கட்டிய முத்திரைத்தாளின் தொகையை திருப்பி பெற்றுக் கொள்ள முடியாது. சொத்தை பெற்ற நபர் பிழை திருத்தல் போட வேண்டிய சமயத்தில் உயிருடன் இல்லை என்றால் அவருடைய வாரிசுகளை வைத்து பிழை திருத்தல் பத்திரம் போடலாம்.

**புதிய கிரய பத்திரம் :**

சொத்தை பெற்ற நபருக்கு வாரிசுகள் இல்லை என்றால் இரண்டாவது வாரிசுகள், மூன்றாம் வாரிசுகள் மூலம் பிழை திருத்தல் போடலாம். அதற்கும் வழியில்லை என்றால் நீதிமன்றத்தை தான் நாட வேண்டும். சொத்தைப் விற்ற நபர் உயிருடன் இருந்தும் பிழை திருத்தல் பத்திரம் போட வர மறுக்கிறார் என்றாலும் நீதிமன்றத்தை நாடியே தீர்க்க வேண்டும். சர்வே எண், நீள, அகல அளவுகள், விஸ்தீரணம் போன்ற அனைத்துமே பிழையாக இருந்தால் பிழை திருத்தம் பத்திரத்திற்கு பதிலாக புதிய கிரய பத்திரம் போட வேண்டி இருக்கலாம்.

முக்கியமாக நினைவில் வைத்துக்கொள்வேண்டியது நாமே நமது பத்திரத்தை திருத்தவே கூடாது:

சில ஆவணங்களில் ஏற்படும் சிறு தவறுகள் உதாரணமாக சர்வே எண், மனை எண், வீட்டின் கதவு எண், குடியிப்பின் தளத்தின் எண், இனிஷியல் தவறுகளை போன்றவற்றை பத்திரப்பதிவு செய்துவிட்ட பிறகு கண்டுபிடித்து விட்டால் அதை அமிலம் வைத்து திருத்துவது, ஒயிட்னர் வைத்து திருத்துவது முற்றிலும் தவறானது. உதாரணத்திற்கு மனை எண் 10 என்பதற்கு பதில் 11 என்று தவறாக இருந்தால் தாங்கள் பத்திரப்பதிவுக்கு பிறகு பத்திரத்தில் 10 என்று நீங்களாகவே திருத்திக் கொண்டாலும், பதிவு அலுவலக பராமரிப்பு ஆவணங்களில் 11 என்று இருக்கும். இதுபோன்று நீங்களே திருத்தம் செய்து கொள்வது சட்ட விரோதம் ஆகும். எனவே உங்கள் ஆவணங்களில் ஏதேனும் பிழைகள் இருந்தால் அதை முறையாக பிழை திருத்தல் பத்திரம் மூலம் மாற்றிக் கொள்வதே சரியான முறையாகும்.

# தமிழகத்து பொறியியலின் தங்க சுரங்கம்
# வீட்டில் தண்ணீர் சிக்கன குறிப்புகள்....



Er.A.G.Marimuthuraj

➔ நமது வீடுகளிலும் அடுக்கு மாடி குடியிருப்பு பகுதிகளிலும் தண்ணீர் சிக்கனம் செய்வது மிகவும் அவசியமாகிறது. நாட்டுலே தண்ணீர் வெள்ளம், அதிக மழையான காலங்களில், சாலையில் தண்ணீர் நிறைய விரையமாகிறத அதைப்பார்த்து நாம் தண்ணீரை குறைவாக மதிப்பிட வேண்டாம். முதலிலே நாம் நம்ம வீட்டு தண்ணீரை சிக்கனமாக செவழிக்கனும். நம்ம வீடுகளில் நிறைய குடும்பங்கள் தண்ணீரை சிக்கனம் செய்கிறார்கள். இதுலே உள்ள சில குறிப்புகள் உங்களுக்கு மேலும் உதவலாம்.

➔ பழமொழி ஆத்துலே போட்டாலும் அளந்து தான் போடனும், அதே மாதிரி தண்ணீரை நாம Use பண்ணும்போது அதோட Consumption ஐ Monitor செய்தால் Automatic ஆக நம்மாலே தண்ணீரை குறைத்து பயன்படுத்த செய்யலாம்.

➔ எங்கே தண்ணீருக்கு அதிகமாக pressure தேவையில்லையோ அங்கே pressure குறைச்சா Automatic ஆக Water Flow கம்மியாயிடும். தண்ணீரை தெறிக்க விடாம Over pressure குடுக்காம தண்ணீரை பயன்படுத்தலாம். சில வீடுகளிலும்/flats லே over head tank delivery pipeline லேயே value போட்டு crack open position லே வைக்கலாம். pressure reduce செய்வதற்கு

➔ அதனாலே தண்ணீர் consumption வருஷம் முழுவதும் ஆக நாம் குறைச்சுதான் ஆகனும். நம்ம இடத்திலே மழை பெய்து ரோட்டிலே வெள்ளமாக ஓடினாலும் நம்ம குடியிருப்புக்குள்ள தண்ணீரை sub mersible pump வாயிலாக எடுக்கறதுக்கு மற்றும் தண்ணீர் usage காக அதிகமாக கரண்ட் செலவு செய்ய தான் வேண்டியிருக்கு. இதுக்கெல்லாம் ஒரே வழி நம்ம தனிப்பட்ட வீடுகளில் தண்ணீரோடு தேவையை குறைத்துக்கலாம். இதை வீட்டுக்குள்ளே தினந்தோறும் எப்படியெல்லாம் குறைக்கலாம் ?

➔ காலையிலே எழுந்தவுடன் பல் தேய்க்க wash basin முன்னாடி நிக்காம Bathroom குள்ளே தண்ணீரை cupலே எடுத்து வைத்து பல் துலக்கலாம். 5 லிட்டர் தண்ணீர் wash basin லே செலவழிப்பதை விட 1 லிட்டர் தண்ணிர் போதும் இதுக்கும். 8 லிட்டர் இரு வேளைக்கு ஒருத்தருக்கு மிச்சம். மொத்தமாக வீட்டிலே 4 பேருக்கு 32 லிட்டர் தினமும் மிச்சமாகிறது இதனால் முக்கால் லட்சம் லிட்டர் தண்ணீர் மாசத்துக்கு மிச்சம்.

➔ வீட்டுலே shave செய்யும்போது கபலே தண்ணீரை wash basin-லே வைச்சு கழுவும்போத 5 லிட்டர் தண்ணீர் வீணாக்குவதற்கு பதிலாக 1 லிட்டர் தண்ணீர் போதும் இதுக்கு 4 லிட்டர் மிச்சம் ஒரு தடவை ஒருத்தருக்கு எவ்வளவு பேர் மற்றும் எத்தனை நாளைக்கு என்பதில்லை பழக்கம் வரணும்.

➔ குளிக்கும்போது தண்ணீரை Shower Bat க்கு பதிலாக வாளியில் தண்ணீரை பிடித்து மொண்டு குளிக்கும்போது 30 லிட்டர் செலவாகிறதை விட 20 லிட்டர்குள்ளே செலவாகும். 10 லிட்டர் ஒருத்தருக்கு மிச்சம். மொத்தமாக வீட்டுலே 4 பேருக்கு 40 லிட்டர் தினமும் மிச்சமாகிறது. 100 flats உள்ள பகுதியிலே இதனால ஒரு லட்சம் லிட்டர் வரை தண்ணீர் மாதத்துக்கு மிச்சம்.

➔ நம்ம வீட்டில் washing Machine போடும்போது முடிந்தவரை full ஆக Load செஞ்சு wash செய்யவும். பாதி loading etநீனால அடிக்கடி machine போடறதாலே மாசத்துக்கு current மற்றும் தண்ணீர் செலவு கூட ஆகும். மொத்த

துணிகளை wash செய்ய துணிகளை தேக்கி வைச்சு machine லே full load செய்யறது economical.

- இன்னும் பழைய வீடுகளில் மற்றும் பழைய apartments லே Toilet லே flush tank லே single flush தான் உள்ளது. அப்போது ஒவ்வொரு single flushhandle இழுத்தா 10 லிட்டருக்கு மேலே தண்ணீர் வீணாகும். Toilet குள்ளே இங்கே தண்ணீர் ரொம்ப விரயமாகிறது.

- இப்போ இருக்கற காலக்கட்டத்திலே தண்ணீரோட அருமையை கருதி நாம தான் flush லே 3 லிட்டர் small button முடிந்தவரை use பண்ணிட்டு two toilet போறப்போ மட்டும் 6 லிட்டர் button press பண்ணலாம். அந்த காலத்திலே bathroom லே ஒரு plastic cup லே தண்ணீரை வீசிட்டு வருவோம். இப்போ flush tank வச்சு நாம் நிறைய தண்ணிரை விரயம் செய்யறோம்.

- Assuming Brus Di latest slim iluh tank 060 dual Flush toilet போயிட்டு buttons பார்த்து press பண்றதில்லை ஏன்னா use பண்றவங்களுக்கு தெரியாது எந்த button எவ்வளவு லிட்டர் தண்ணீரை flush செய்யும் என்று நாமே நம்ம fu;is j tank லே red ink sticker 6 liters, blue ink sticker 3 liter ன்னு எழுதி அதுக்கு மேலே ஒட்டலாம்.

- இதுக்காகவே நான் authorities கிட்டேயும் Government Flush tank தயாரிப்பாளர்களிடமும், suggestion கொடுத்துள்ளேன். Provide water liter display sackers for the big and small flush buttons on top of flush tank இது நிறைய பேருக்கு சின்ன அல்ப விசயமாக தோணலாம். ஆனால் தண்ணீரை point of usage லே எப்படியாவது நாம் குறைக்கனும்.

- Already நிறைய வீடுகளில் இதை செஞ்சாச்சு, ஒரு லிட்டர் (தண்ணீர் fille) pet water bottle flushtank லே போட்டு வைச்சா ஒரு வீட்டிலே 6 லிட்டர் ஒருத்தருக்கு தினமும் மிச்சம். ஒரு நாளைக்கு 4 பேருக்கு 24 லிட்டர் தினமும் மிச்சம். 100 flats உள்ள பகுதியில் இதனாலே அரை லச்ம் லிட்டர் வரை தண்ணீர் மாசத்துக்கு மிச்சம்.

- நம்ம Kitchen sink லே பாத்திரங்கள் கழுவுவதற்கு நிறைய தண்ணீர் செலவாகிறது. வேலைக்காரம்மா sink tap திறந்து விட்டா மணி நேரம் வரை vessels, cleaning கே ரொட்ட செலவாகிறது. சுமாராக 40 லிட்டர் தண்ணீர் பாத்திரம் கழுவ use ஆகிறது.

- Aerator retrofit பண்ணின பிறகு 50 % savingsலே வேலை செய்யறது பூவாளி மாதிரி தண்ணீர் sprinkle po convenient & productive. ministry of jal shakthi, June 2019 6/ water taps 60 ciruclar Qumne 40 லிட்டர் தண்ணீர் பாத்திரம் கழுவறதுலே Aerator Fix i 50% savings, 100 flats (75% occupancy) உள்ள பகுதிலே அரை லட்சம் லிட்டர் வரை தண்ணீர் மாசத்துக்கு மிச்சம்.

- இப்ப local market லே or e-commerce site Geo water tap rectractor Rs.10/- Gen கிடைக்கிறது. உங்க water taps லே open ஆக தண்ணீர் ரொம்ப கொட்டாம இருக்க இன்னைக்கு – உடனே Aerator Retrofit செய்யவும்.

- Apartments 4 மாடி கட்டிடம் – அதுக்குமேல overhead tank தண்ணீர் வரும்பொழுது நாம கண்டிப்பாக எல்லா Water taps Go restrictor / aerator retrofit பண்ணனும் குறைஞ்சது 50% water savings ஒவ்வொரு நயவநச வயி லேயும் நம்மாலே சிக்கனப்படுத்த முடியும் அதே மாதிரி 100 வீடுகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பில் (எங்களுக்கு) common utility electricity consumption ஒரு நாளைக்கு 220 electricity units ஆகிறது.

- இதுலே one third STP க்கான கரண்ட் செலவு தான் அதுலே தண்ணீரை pumping செய்யறதுக்காக மட்டும் (stp-consumption சேர்த்து) 220 units ஆகிறது.

# நினைவில் நின்றவை

ஒவ்வொரு மனிதனும் இரண்டு வாழ்க்கை வாழ்கிறான். ஒன்று வாழ நினைத்தது. மற்றொன்று வாழ்ந்து கொண்டிருப்பது. எப்படியெப்படியெல்லாமோ வாழ நினைத்து அது கைகூடாத போது, அந்த வாழ்க்கையை அவன் கற்பனையில் வாழ்கிறான். இது முதல் வகை, இரண்டாவது அவன் வாழ்ந்து கொண்டிருக்கும் நிஜமான யதார்த்தமான வாழ்க்கை. ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் இது பொருந்தும்.

இந்த பூமியில் மனித இனம் தோன்றியது முதல், வாழ்க்கைமுறை மாறிக்கொண்டே இருக்கிறது. ஆதி கால மனிதனுக்கு இரண்டே இரண்டு பிரச்சனைகள்தான். ஒன்று உணவு மற்றொன்று பாதுகாப்பு. உணவைத் தேடி அலைவது. விலங்குகளிடமிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்வது. இதற்காகவே அவன் தனது வாழ்நாள் முழுவதையும் செலவிட்டான்.

ஆரம்பத்தில் உணவை பச்சையாக சாப்பிட்ட மனிதன், நெருப்பை கண்டுபிடித்த பின் சமைத்து சாப்பிட ஆரம்பித்தான். இலை தழைகள், தோல் ஆகியவற்றை உடையாக அணிந்த அவன் படிப்படியாக ஏற்பட்ட பரிணாம வளர்ச்சி நவீன வசதிகளால் இன்று உச்சத்தை தொட்டு இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். உணவு, உடை, இருப்பிடம், போக்குவரத்து தகவல் தொடர்பு மருத்துவம் என்று மனித வாழ்க்கை மிக உயர்ந்த நிலையை அடைந்து இருக்கிறத. இதனால் சராசரி ஆயுட்காலம் கூடி இருக்கிறது. எல்லா வசதிகளும் கிடைப்பதால் வாழ்க்கை எளிமையாகிவிட்டது.

ஆனால் வசதி வாய்ப்புகளால் மட்டுமே மகிழ்ச்சியும், நிம்மதியும் கிடைக்கும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. நாம் அனுபவிக்கும் இந்த



நவீன வசதிகளெல்லாம் இல்லாமல்கூட நம் முன்னோர்கள் மகிழ்ச்சியாகத்தான் வாழ்ந்தார்கள். எந்த எதிர்ப்பார்ப்பும் இல்லாமல் இருப்பதை வைத்துக் கொண்டு வாழும் வாழ்க்கை இனிமையாகத்தான் இருக்கும் என்பதற்கு நம் முன்னோர்களே சாட்சி, இன்றைய நவீன உலகத்தில் எத்தனையோ கண்டுபிடிப்புகள் வந்து நம் வாழ்க்கையை எளிமையாகவும், வசதியாகவும், மகிழ்ச்சியாகவும் மாற்றி விட்டது என்ற போதிலும் ஒரு நெருக்கடி, பரபரப்பு, போட்டி உணர்வு மன அழுத்தம் அதனால் உண்டாகும் உடல்நல பாதிப்பு போன்றவற்றையும் அது கொடுத்து இருக்கிறது என்பதையும் மறுக்க முடியாது.

அந்தக் காலத்திலும் வாழ்க்கையில் பிரச்சனைகள் இருந்தன. ஆனால் இப்போது கிட்டத்தட்ட பிரச்சனைகளே வாழ்க்கையாகிப்போனது. அப்போ தெல்லாம் உறவுகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தார்கள். குடும்பங்களுக்குள் எவ்வளவு கருத்து வேறுபாடுகள், மனத்தாங்கல்கள்

இருந்தாலும் உறவுச்சங்கிலி அறுந்துவிடக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்தார்கள்.

போதிய அடிப்படை வசதிகள் இல்லாத ஐம்பது, அறுபது ஆண்டகளுக்கு முன்பெல்லாம் மக்கள் மகிழ்ச்சியாகவும், நிம்மதியாகவும் மனநிறைவாகவும், வாழ்ந்தார்கள் என்பதற்கு நம் தாத்தா பாட்டிகளே சாட்சி. அன்றைய காலக்கட்டத்தில் கிராமப்புறங்களில் ஒரு சராசரி மனிதனில் வாழ்க்கை சுமார் 50 கி.மீ சுற்றவுக்குள்ளேயே முடிந்துவிடும். அந்த வட்டத்துக்குள்ளேயே அவர்கள் சந்தோஷமாக வாழ்ந்து முடித்தார்கள். முதுமையின் வாசலில் நின்று கொண்டிருப்பவர்களில் பலர் இப்போதும் தங்கள் கடந்த கால வாழ்க்கையின் மலரும் நினைவுகளை எண்ணி பெருமூச்சு விடுவது உண்டு.

முன்பெல்லாம் வீடு முழுக்க தாத்தா பாட்டி அப்பா அம்மா அண்ணன் தம்பி அக்கா தங்கை பெரியப்பா பெரியம்மா, சித்தப்பா சித்தி, அத்தை மாமா என்ற உறவினர்கள் நிரம்பி இருந்தார்கள். இதனால் வீடு கலகலப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது. பொறுப்புகளை பகிர்ந்து கொண்டதால் தங்கள் வேலைகளை யாரும் சுமையாக கருதியதில்லை. பணப்புழக்கம் மிகவும் குறைவுதான் என்றாலும் மனப்புழுக்கம் இருந்ததில்லை. எதிர்பார்ப்புகள் குறைவாக இருந்தாலும், பிறருடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போக்கு இல்லாததாலும் நிம்மதிக்கு பஞ்சமில்லை. இதனால் குடும்பம் என்ற தேர் எந்த தடங்கலும் இடையூறும் இன்றி அழகாக நகர்ந்து சென்றது.

நாடு சுதந்திரம் அடைந்த பிறகுதான் இந்தியாவில் ஏராளமான கிராமங்களுக்கு மின்சார வசதி கிடைக்க ஆரம்பித்தது. அதுவரை கல்யாணம் கோவில் திருவிழாக்களெல்லாம் எண்ணெய் விளக்கு பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில்தான் நடந்தன.

கோவில் திருவிழா சமயத்தில் புத்தாடை, சொந்தபந்தங்கள் வருகை விருந்து கச்சேரி என்று 3 நாட்களுக்கு ஊரே தூங்காது. கரகாட்டம், வில்லுப்பாட்டு கணியன் பாட்டு என்று விடிய விடிய விழித்திருந்து பார்ப்பார்கள். இப்போதெல்லாம் அந்த ஆர்வம் மக்களிடம் வெகுவாக குறைந்துவிட்டது. செல்போன், டி.வி தொடர் என்று பலர் வீட்டிலேயே முடங்கிவிடுகிறார்கள்.

ஒரு காலத்தில் மண்ணெண்ணெய் விளக்கு பொருத்தப்பட்ட சைக்கிள் இருந்தத என்பதை இப்போதைய தலைமுறையினர் நம்புவது சிரமம்தான். சுமார் அரை நுற்றாண்டுகளுக்கு முன்பெல்லாம் கிராமங்களில் டைனமோ வைத்த ராலிே சைக்கிள் வைத்திருப்பது பெரிய அந்தஸ்து. 1970 மற்றும் எண்பதுகளில் பிமீக்ஷீஷீ பேனா வைத்திருப்பதை மாணவர்கள் பெருமையாக கருதுவார்கள். பரிட்சையின்போது நிறைய எழுதுவேண்டி இருக்கும் என்பதால் சிலர் மை பாட்டிலையும் எடுத்துச் செல்வது உண்டு.

பெரும்பாலும் வீடுகளில் ஆட்டுரல், உரல், மாவு திரிக்கும் திரியல் இருக்கும். இரண்டு பெண்கள் எதிரெதிரே நின்றவாறு ஊர்க்கதை பேசியபடியே மாறி மாறி உலக்கையை போட்டு உரலில் நெல் குத்துவது ஓர் அற்புதமான கலை என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் உலக்கைகள் மோதிக் கொள்ளாமல் குத்துவதற்கு தனித்திறமை வேண்டும்.அரவை எந்திரங்கள் வந்ததால் இந்த கல் எந்திரங்களெல்லாம் காணாமல் போய்விட்டன.

இளைஞர்கள்கூட பெரியவர்கள் யாரும் பார்த்துவிடக் கூடாதே என்று பயந்து பயந்து புகைபிடிப்பார்கள். டீக்கடைக்கு சென்று டீ குடிப்பது கூட கெட்ட பழக்கமாக

கருதப்பட்ட காலம் ஒன்று உண்டு. அந்த ஒழுக்கம், கட்டுப்பாடு, மரியாதையெல்லாம் பழங்கதையாகிவிட்டது. கிராமங்களின் முகமே மாறிக் கொண்டிருக்கிறது. அந்தக் காலத்தில் குழந்தைப்பருவ வாழ்க்கையில் ஆனந்தத்துக்கு குறைவில்லை. தனியார் பள்ளிகள் மிகவும் குறைவு என்பதால் கல்வி இலவசமாகவே கிடைத்தது. போட்டிகளும், நெருக்கடிகளும் இல்லாததால் பள்ளி நாட்கள் மன அழுத்தம் இன்றி மகிழ்ச்சியாக கழிந்தன.

முன்பெல்லாம் பள்ளிக்கூடங்களில் காலையில் பிரேயர் முடிந்து வகுப்பு தொடங்கும் முன் வாய்ப்பாடு சொல்லும் பழக்கம் இருந்தது. ஒரு மாணவர் ஒரு வாய்ப்பாட்டை சொல்ல, மற்ற மாணவர்கள் அவரைத் தொடர்ந்து சொல்வார்கள். இதனால் நடுநிலைப்பள்ளி படிப்பைத் தாண்டும் முன்பே எல்லா மாணவர்களுக்கும் 16 வரையிலான வாய்ப்பாடு மனப்பாடம் ஆகிவிடும். பழைய புத்தகங்களை பாதி விலைக்க வாங்கி படித்த அனுபவம் இப்போது யாருக்காவது உண்டா ?

**கானல் நீரான அனுபவங்கள்**



காலத்தை கி.மு, கி.பி என பிரிப்பது போல் வாழ்க்கை முறையை செ.மு, செ,பி (செல்போனுக்கு முன், பின்) எனப் பரிக்கலாம். கணினியும், செல்போனும் வந்தபிறகு எழுதும் பழக்கமம், படிக்கும் பழக்கமும் வெகுவாக குறைந்துவிட்டது. இதைப்பற்றி சமீபத்தில் ருவர் தனது வலைத்தள பக்கத்தில் இப்படி எழுதியிருந்தார்.

அலமாரியில் ஓர் உடல் கிடந்தது. அதன் பெயர் புத்தகம். விசாரணையில் கொலையாளி "மொபில் போன் " எனக் கண்டறியப்பட்டது. என்று வேதனையுடன் அவர் குறிப்பிட்டிருந்தார். முன்பெல்லாம் ரெயிலில் பயணம் செய்பவர்களில் பெரும்பாலானவர்களின் கைகளில் ஏதாவது ஒரு வார மாத இதழ் அல்லது நாவல்கள் இருப்பதை பார்க்க முடியும். நேரத்தை பயனள்ள வகையில் படிப்பதில் செலவிடுவார்கள். அல்லதுழ அருகில் இருப்பவர்களுடன் உரையாடுவார்கள். ஆனால் இன்றோ எல்லோரும் செல்போனை தடவியபடியே குனிந்த தலை நிமிராமல் இருக்கிறார்கள். அக்கம் பக்கம் திரும்பிக்கூட பார்ப்பது இல்லை.

**காணாமல் போன "மரக்கால்"**



வேளாண்மையை ஆணிவேராக கொண்ட நம் தேசத்தில் விவசாய பணிகளில் பெரும் மாற்றம் ஏற்பட்டு உள்ளது. உழுவதற்கு டிராக்டர் வந்து விட்டதால் ஏர் கலப்பை மற்றும் மாடுகளின் தேவை வெகுவாக குறைந்துவிட்டது. நடுவை, களையெடுப்பு, அறுவடை பணிகளுக்கு ஆட்கள் கிடைப்பது குதிரை கொம்பாகி விட்டதாக புலம்புகிறார்கள். முன்பெல்லாம் வயலில் விளைந்த நெற்கதிர்களை கூர்வடி என்பவர் தலைமையில் அறுவடை செய்து களத்துக்கு கொண்டு வந்து சேர்ப்பார்கள். அவர்களுக்கு கூலியாக நெல் கொடுக்கப்படும். அறுவடைங்கரு எந்திரங்கள் வந்துவிட்டதால் அவர்கள் காணாமல் போய்விட்டார்கள். அந்தக் காலத்தில் நெல்லை மரக்கால் அளவில்தான் கணக்கிட்டார்கள். இதற்காகவே நாழி மரக்கால், குண்டு மரக்கால் என்ற இருவகை மரக்கால்கள் இருந்தன. காலப்போக்கில் நெல்லை கிலோ கணக்கில் அளவிடும் முறை வந்தததால் அந்த மரக்கால்களெல்லாம் காட்சிப் பொருளாகிவிட்டன.

இதேபோல்தான் வைக்கோலை விரித்து உலர்த்துவதற்கு பயன்படும் வளைவாக உகுக்கு பொருத்தப்பட்ட தொடுவை என்ற கம்பும் காணாமல் போய்விட்டது. சாப்பாட்டுக்கு தேவையான நெல்லை சேமித்து வைக்க வீட்டின் மூலையில் சுமார் 5 அடி உயரத்தில் மண்குதிர் இருக்கும். இதை தென் மாவட்டங்களில் குலக்கை என்பார்கள். அதிலிருந்து நெல்லை வெளியே எடுக்க அடியில் துவாரம் ஒன்றும் இருக்கும். அந்த துவாரம் தேங்காய் மூடி வைத்து மண் பூசி மூடப்பட்டு இருக்கும். நம் முன்னோர்களின் சேமிப்பு கிடக்கான இந்த மண்குதிர் இப்போதும் சில வீடுகளில் பார்க்கலாம்.

மாறிவரும் சூழ்நிலைகளை வைத்துப் பார்த்தால், எதிர்காலத்தில் ஏர்கலப்பை கூட காட்சிப் பொருளாகிவிடுமோ என்ற அச்சம் பலருக்கும் உள்ளது.

பண்டிகைகளும் .... சினிமாவும்

அந்தக் காலத்திலெல்லாம் தீபாவளி, பொங்கல் பண்டிகைகளின் கொண்டாட்டத்தில் சினிமா படங்களுக்கு முக்கிய இடம் உண்டு. இப்போது போலவே அப்போதும் இந்த பண்டிகைகளின் போது புதுப்படங்கள் வெளியாகும். அதில் எம். ஜி.ஆர், சிவாஜி படங்கள் கண்டிப்பாக இருக்கும். வேறு பொழுது போக்கு வசதிகள் எதுவும் கிடையாது என்பதால் பண்டிகை நாட்களில் கொட்டைக்கு சென்று படம் பார்ப்பது என்பது இளைஞர்களுக்கு மிகப் பெரிய லட்சியமாகவும், எல்லையில்லா கொண்டாட்டமாகவும் இருந்தது. என்னென்ன படங்கள் ரிலீஸ் ஆகின்றன ? எந்த தியேட்டருக்கு செல்வது ? என்றெல்லாம் நண்பர்களுடன் பேசியபடி அந்த கவுண்ட் டவுன் முடியும் நாளை எதிர்பார்த்து காத்துக்கிடப்பார்கள்.

கிராமங்களில் உள்ள 60 வயதை கடந்த தாத்தாக்களின் மனதில் இப்போதுகூட அந்தக்கால பண்டிகை நாட்களின் இனிமையான நினைவுகள் ஒரு பிளாஷ்பேக்காக தோன்றி மேகங்கள் போல் கலைந்து போகும்.

# அலுவலக தகவல் பரிமாற்றம் 1

**(இறையன்பு, இ.ஆப. அவர்கள் எழுதிய என்ன பேசுவது! எப்படி பேசுவது! என்ற புத்தகத்திலிருந்து பெறப்பட்டது)**

இன்சொலால் அன்றி இருநீர் வியன்உலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே (நன்னெறி)

**எந்தக் கருத்தை எழுதும்போதும் ஒரு முறை மனத்தில் அதை வடிவமைத்துக் கொள்ள வேண்டும். எளிய சொற்களே பிரமாண்டமானவை. நம்முடைய சொற்திறனை நாம் எழுதுகிற கவிதையிலும் கதையிலும் காண்பிக்கலாமே தவிர அலுவலகப் பணியில் காண்பிக்கக் கூடாது. இடக்கரடக்கலையோ அலங்காரச் சொற்களையோ உருவகங்களையோ, உவமைகளையோ ஆகுபெயர்களையோ பயன்படுத்தினால் அவை ஆகாத பெயர்களாக ஆகிவிடும்.**

தனிப்பட்ட முறையில் நாம் எவ்வாறு தகவல்களைத் தெரிவிப்பது, கடிதங்கள் எழுதுவது என்பதை அலசினோம். பெரும்பாலும் நாம் தனிப்பட்ட முறையில் எழுதுகிற எழுத்துக்கள் கடிதங்களாகவோ அல்லது குறுஞ்செய்திகளாகவோ அல்லது மின்னஞூசல்களாகவோ இருக்கின்றன.

குறுஞ்செய்திகளை அனுப்பும்போதும், ஒரு முறைக்கு இரண்டு முறை சொற்களின் எழுத்துக்கள் சரியாக இருக்கின்றனவா என்று பார்க்க வேண்டும். மிடுக்குப்பேசிகளில் சுய திருத்தம் (AUTO CORRECTION) மேற்கொள்ளும் வசதிகள் இருப்பதால் நாம் அடிப்பது ஒன்றாகவும், அது அனுப்புவது ஒன்றாகவும் இருக்கிறது. எனவே சரிபார்பத்து அனுப்பாவிட்டால் எக்குத்தப்பாகச் செய்திகள் போய் விடுவது உண்டு. ஒருவர் "நீங்கள் ரொம்ப நல்லவர் " என்று தமிழ் வாக்கியத்தை ஆங்கிலத்தில் தட்டச்சு செய்து அனுப்பினார். ஆனால் அது சுயதிருத்தம் மேற்கொண்டு நீங்கள் ரொமான்டிக் நல்லவர் என்று போய் சேர்ந்தது. பிறகு அவர்களுக்குள் வருத்தமும் விளக்கமும் சொல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

